# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

# මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

24/2, 28th Lane, Off Flower Road, Colombo 07
**Tel:** 011 7920950, 0117920951**Fax:** 011 7920949
**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cpalanka.org


## பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2010

## ஊடக அறிக்கை 02

## 20 மார்ச் 2010

## 16.00 மணி

***கொழும்பு, இலங்கை,*** மார்ச் 20 ஆம் திகதி வரையில் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்(CMEV) மொத்தமாக தேர்தல் வன்முறைகள் தொடர்பு பட்ட 146 சம்பவங்களை பதிவு செய்துள்ளது. இவற்றுள் 87 பாரிய வன்முறைச் சம்பவங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ள சம்பவங்கள் 29 ஆக உயர்ந்துள்ளன.

தேர்தல் வன்முறைகள் தொடர்பாக அண்மையில் கிடைக்கப்பெற்ற சம்பவங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

**ஏறாவூர் மட்டக்களப்பில் ஐ.ம.சு.மு ஆதரவாளரொருவரின் லொரி தீவைப்பு**
மாரச் 20 அதிகாலை 12.30 மணியளவில் ஐ.ம.சு.மு ஆதரவாளர் இப்ராகிம் ரகீமின் லொரி இனந்தெரியாத குழு ஒன்றினால் ஏறாவூர் காந்தி வீதியில் வைத்து தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான முறைப்பாடொன்றை (ECIB 29/10) இப்ராகிம் ரகீம் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்டுள்ளார்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலைய (CMEV) களக் கண்காணிப்பாளர் சம்பவ இடத்திற்கு சென்று இப்ராகிம் ரகீமிடம் வாக்கு மூலமொன்றை பதிவு செய்துள்ளார். அவர் தான் ஐ.ம.சு.மு ஆதரவாளரென்றும் அவரது வாகனம் கட்சியின் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவதாகவும் அறிவித்துள்ளார்.

களக் கண்காணிப்பாளர் அறிக்கையின் படி லொரியின் முற்பகுதி பூரணமாக எரிந்து சேதமாகியுள்ளது.

ஐ.ம.சு.மு முன்னணி வேட்பாளர் அலி சாகிர் மௌலானா( வேட்பாளர் இல 02) வின் கட்சி காரியாலய பொறுப்பாளர் ஏ.சீ.எம் செய்யது இவ்வாகனம் ஐ.ம.சு.முன்னணியின் பிரச்சார கூட்டங்களின் போது தளபாடங்களை கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படுவதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) தெரிவித்தார். மேலும் இவர் கட்சியின் முனைப்பான ஆதரவாளர் ஒருவர் எனவும் குறிப்பிட்டார்.

ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.ஜீ.ஏ.எஸ் பியரட்ன சம்பவம் நடைபெற்றதை உறுதிப்படுத்தியதுடன் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) தெரிவித்தார்.

**ஐ.தே.க வாகன தொடரணி மீது புத்தம் ஆழங்குடாவில் தாக்குதல்**

ஸ்ரீ.ல.மு.கா செயற்குழு உறுப்பினரான ஏ.எம் ஹீசைன் கூற்றுப்படி மார்ச் 19 ஆம் திகதி மாலை 4.00 மணியளவில் ஆழங்குடா B முகாம் அருகில் அமைக்கப்பட்டிருந்த ஐ.தே.க காரியாலயத்தின் மீது மீள் குடியேற்ற மற்றும் இடர் முகாமைத்துவ சேவைகள் அமைச்சரும் ஐ.ம.சு.மு வன்னி மாவட்ட வேட்பாளருமான ரிசாட் பதூர்தீனின் (வேட்பாளர் இல 01) ஆதரவாளர் குழுவொன்று தாக்கியுள்ளது ஐ.தே.க ஆதவாளரொருவரான ஜெம்சீர் என்பவர் இத்தாக்குதல் சம்பவம் காரணமாக தனது இடது கையில் சிறு காயங்களுக்கு உள்ளானார்.

இரவு 8.00 மணியளவில் ஐ.தே.க வேட்பாளர்களான நூர்தீன் மசூர் (வேட்பாளர் இல 05) ஏ.கே.எஸ் ஹமீட் (வேட்பாளர் இல 01) மற்றும் எம்.எச்.ரினூஸ் (வேட்பாளர் இல 08) ஆகியோரின் வாகனத் தொடரணி மீது மற்றுமொறு தாக்குதல் ரிசாட் பதூர்தீனின் ஆதரவாளர் குழுவினால் ஆழங்குடா கல்முனைக்குடி B விளையாட்டு திடல் அருகில் வைத்து மேற் கொள்ளப்பட்டுள்ளது. ஹீசைனின் தகவலின் படி 13 வாகனங்கள் சம்பவத்தில் சேதமடைந்ததுடன் 240,000 அளவில் நட்டம் ஏற்பட்டுள்ளது.

விசேட அதிரடிப்படையினர் உம் இத் தாக்குதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதுடன் ஐ.தே.க ஆதரவாளர்களைத் தாக்கியதாக ஹீசைன் குற்றம் சுமத்தினார்.

அமைச்சர் ரிசாட் பதூர்தீனை பல தடவைகள் தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் தொடர்பு கிடைக்கவில்லை.

சம்பவங்கள் பற்றிய மேலதிக விபரங்களை பெறுவதற்காக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலைய(CMEV) களக் கண்காணிப்பாளர் கல்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு சென்ற போதும் சம்பவம் தொடர்பான எவ்வித தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலைய(CMEV) தலைமை செயலகத்தினாலும் தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக மேற் கொள்ளப்பட்ட முயற்சிகளும் பயனலிக்கவில்லை.

புத்தளம் தேர்தல் தொகுதியிலிருந்து தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்(CMEV) 9 தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களை பதிவு செய்துள்ளது. இவற்றுள் 7 சம்பவங்கள் கல்பிட்டிய பொலிஸ் நிலைய பிரிவிற்குட்பட்டதாகும். கல்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒரு சம்பவம் மட்டுமே முறையிடப்பட்டுள்ளது. இரு சம்பவங்களின்பொழுது முறைப்பாட்டாளர்கள் நேரடியாக பொலிஸார் ஆளுக்கட்சிக்கு பக்கச்சார்பானவர்கள் என்றும் அவர்கள் மீது நம்பிக்கை இல்லையென்றும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

**சிலாபத்தில் வாக்காளர்கள் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு**

புத்தளம் சிலாபம் பகுதியில் இலங்கை சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் உதுல நுவன் பத்திரனவின் கையொப்பத்தின் கீழ் மார்ச் 05 திகதியிடப்பட்ட கடிதமொன்று விநியோகிக்கப்படுவதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) மார்ச் 20 ஆம் திகதி தகவல்கள் கிடைக்கப்பெற்றன. குறிப்பிட்ட கடிதம் அரசாங்க தொழில் வாய்ப்புக்களை பெற விரும்பும் பட்டதாரிகள் குறைந்தது 20 தினங்களாவது வீட்டுக்கு

வீடு சென்று ஐ.ம.சு.முன்னணிக்காக பிரச்சார நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) சம்பவம் தொடர்பாக உதுல நுவன் பத்திரனவை தொடர்பு கொண்டபோது அவர் குற்றச்சாட்டுக்களை மறுத்துரைத்ததுடன் அவரது போலி கையொப்பமிடப்பட்ட கடிதமொன்று சிலாபம் தேர்தல் தொகுதியில் விநியோகிக்கப்படுவதாக தெரிவித்தார். மேலும் இது தொடர்பில் ஐ.ம.சு.முன்னணியின் சிலாபம் தேர்தல் தொகுதி ஏற்பாட்டாளரும் வேட்பாளருமான நியூமல் பெரேரா (வேட்பாளர் இல 07) விற்கு இது தொடர்பில் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார். தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்(CMEV) நியூமல் பெரேராவை தொடர்பு கொண்ட போது இது சம்பந்தமாக தனக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் கட்சிக்காக பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றவர்களுக்கு மாத்திரமே வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படும் என கட்சி தீர்மானித்துள்ளதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்துரைத்தார்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் ( CPA) 1997 ம் ஆண்டு தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையம் (CMEV) ஆரம்பிக்கப்பட்டது. சுதந்திரமாகவும் பக்கசார்பற்ற வகையிலும் தேர்தல் வன்முறைகளை கண்காணிக்க சுதந்திர ஊடக இயக்கமும் (FMM) இணைந்துகொண்டது. தற்போது தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையம் (CMEV), மாற்றுக் கொள்கைக்கான நிலையம் (CMEV) சுதந்திர ஊடக இயக்கம் (FMM), மற்றும் INFORM மனித உரிமைகள் ஆவணப்படுத்தும் நிலையம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இயங்கிவருகின்றது.



கலாநிதி பா.சரவணமுத்து
இணை-அழைப்பாளர்



சுனில் ஜயசேகர
இணை-அழைப்பாளர்



உதய கலுபதிரண
இணை-அழைப்பாளர்